More Create Blog Sign In

# யாவரும் கேளீர்

Search

வியாழன், 17 மார்ச், 2022

## சிலப்பதிகாரம் (அடைக்கலக்காதை) உரைப்பகுதி (Text)

Generic Elective - II
Advanced Tamil - II
சிறப்புத் தமிழ்
தமிழ் இலக்கியங்களும் வரலாறும்- II
அலகு - 1

## சிலப்பதிகாரம்

### ( அடைக்கலக் காதை)

தமிழில் தோன்றிய முதல் காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். இக்காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள் ஆவார். முத்தமிழ்காப்பியம், குடிமக்கள் காப்பியம் எனப் பல சிறப்புகள் இக்காப்பியத்துக்கு உண்டு. மூன்று காண்டங்களும் முப்பது காதைகளும் ஐந்தாயிரத்தொரு அடிகளையும் கொண்டது இந்நூல்.

**அடைக்கலக் காதை**

மதுரைக் காண்டத்தில் ஊர்க்காண் காதை மற்றும் கொலைக்களக் காதை ஆகியவற்றுக்கிடையே அடைக்கலக் காதை இடம்பெற்றுள்ளது. மதுரை நகர்வலம், பாண்டியர் அரசவையில் கோவலன் மீதானப் பழி,கோவலன் கொல்லப்படுதல் ஆகிய நிகழ்வுகளுக்கு இடையே கண்ணகி விருந்தினராக ஓர் இல்லத்தில் தங்க வைக்கப்படுகிறார். அடைக்கலம் தேடி வருவோரைப் பேணும் முறைகளை விவரிக்கிறது அடைக்கலக் காதை.

**காப்பிய மாந்தர்கள்**

- கண்ணகி
- கோவலன்
- கவுந்தியடிகள்
- மாடலமறையோன்
- மாதரி
- சாயலன் மற்றும் அவர் மனைவி
- மாதவன்
- உத்தரகௌத்தன்
- வளைந்த யாக்கை மறையோன்
- அந்தணப்பெண்
- இரு கீழ் மகன்கள்
- ஒரு கீழ் மகனின் தாய்
- மணிமேகலை

இந்த வலைப்பதிவில் தேடு

Search

- Home

மார்ச் 2022 (13)
ஏப்ரல் 2022 (10)
ஜூன் 2022 (4)
செப்டம்பர் 2022 (1)
அக்டோபர் 2022 (19)

இந்த வலைப்பதிவில் தேடு

Search

என்னைப் பற்றி



யாவரும் கேளீர்
பாடக்குறிப்புகளின் களம்
எனது முழு சுயவிவரத்தைக் காண்க

முறைகேடு எனப் புகாரளி

வலைப்பதிவு காப்பகம்

அக்டோபர் 2022 (19)
செப்டம்பர் 2022 (1)
ஜூன் 2022 (4)
ஏப்ரல் 2022 (10)
மார்ச் 2022 (13)

### குழு மாந்தர்கள்

- மாமுது கணிகையர்
- பெரு வணிகர்கள்
- கோவலர்
- சாரணர்கள்
- பட்டினிநோன்பிகள்

### தேவ மாந்தர்கள்

- பூதம்
- குரங்குக்கை வானவன்
- இந்திரன்
- மணிமேகலை
- இயக்கி

### கண்ணகியும் கோவலனும்

இவர்கள் காப்பியத்தின் முதன்மைக்  கதைமாந்தர்கள் ஆவர். கணவன் மனைவி ஆன கோவலனும் கண்ணகியும் பெரு வணிகர்களின் பிள்ளைகள் ஆவர். இல்லற வாழ்வில் ஏற்பட்ட கசப்புணர்வுகள் பிரிவுக்குக் காரணமாகியது.கோவலன் மாதவியுடன் இணைந்து வாழ்ந்து அங்கும் ஊடல் ஏற்பட மீண்டும் கண்ணகியுடன் இணைகிறான். புதிய வாழ்வு தொடங்க பொருளாதாரம் தேவை என்பதனால் கையிலுள்ள சிலம்பை மதுரைக்குச் சென்று விற்று வரத் திட்டமிடுகின்றனர் தம்பதியர்.

### கவுந்தியடிகள்

இவர் சமண சமயம் சார்ந்தப் பெண் துறவியாவார். சாலை வசதிகளும் தகவல் தொடர்புச் சாதனங்களும் இல்லாத அக்கால கட்டத்தில் கண்ணகி கோவலனின் மதுரைப் பயணத்துக்கு வழித்துணையாக இருந்தவர் கவுந்தியடிகள் ஆவார். கோவலர் இனம் சார்ந்த மாதரியிடம் கோவலன் மற்றும்  கண்ணகியை விருந்தினராகத் தங்க வைக்க ஏற்பாடு செய்கிறார்.

### விருந்தோம்பலின் சிறப்பு

'தவத்தார் அடைக்கலம் தான்சிறிது ஆயினும்
மிகப்பேர் இன்பம் தரும் '
என அடைக்கலம் தருதலின் சிறப்பை மாதரியிடம் எடுத்துக் கூறுகிறார் கவுந்தியடிகள். தங்க இடமும் உண்ண உணவும் தருதல் மட்டுமன்று; அவர்களை நன்னீரில் குளிப்பித்து ,கண்களுக்கு மை தீட்டி, கூந்தலில் மலர்களைச் சூட்டி,தூய ஆடைகளை அணிவித்துக் கண்ணகியைத் தாயாகத் தாங்க வேண்டும் என்கிறார். பசித்தவர்களுக்கும் உயிரினங்களுக்கும் உணவளித்துப் பேரின்ப உலகுக்குச் சென்ற சாயலன் மற்றும் அவருடைய மனைவி ஆகியோரின் வாழ்வியலை விவரிப்பதன் மூலம் விருந்தோம்பலின் சிறப்பு புலப்படுத்தப்படுகிறது.

### மாடலமறையோன்

தலைச்செங்காணம் என்ற ஊரைச் சார்ந்த இவர் வேத மரபினர் ஆவார். பொதிய மலை, குமரிப் பெருந்துறை ஆகிய இடங்களுக்குச் சென்று கவுந்தியடிகள் தங்கியிருந்த சமணப் பள்ளியை அடைகிறார். அங்கு கோவலனைக் காணும் அவர் கவுந்தியடிகளிடம் கோவலனின் சிறப்புகள் பலவற்றைப் பின்வருமாறு விவரிக்கின்றார்.

- தம் முன்னோர் கடற்பயணத்தில் தத்தளித்த போது அவரைப் பாதுகாத்த 'மணிமேகலை' என்ற தெய்வத்தின் நினைவாக மாதவிக்குப் பிறந்த குழந்தைக்கு 'மணிமேகலை' எனப் பெயர் சூட்டியது.
- வயோதிக அந்தணர் ஒருவரை யானை ஒன்று தாக்க முனைந்த போது அம்முதியவரைத் தம் உயிரைப் பணயம் வைத்துக் காப்பாற்றுதல்.
- கீறிப் பிள்ளையைக் கொன்றதனால் கணவனைப் பிரிந்து பெருந்துயருக்கு ஆளான அந்தணப் பெண்ணுக்காக ஏராளமாக தான தர்மங்கள் வாயிலாக அவர்தம் பழியைப் போக்கி கணவருடன் இணைந்து வாழ வழிவகை செய்தது.
- கற்புள்ள பெண்ணின் மீது அவர் கணவரிடம் களங்கம் கற்பித்துப் பழித்துரைத்தக் கீழ்மகனைப் பூதம் ஒன்று உயிரைப் பறித்துத்

தண்டிக்கிறது. இதனால் துன்பத்துக்கு ஆளான அக்கீழ்மகனின் தாயாரை அரவணைத்தல்.

**கோவலன் கண்ட கனவு**
மேற்கூறிய நற்பண்புகளை உடைய கோவலன் தற்போது ஊர் விட்டு ஊர் வந்த துன்பத்துக்குக் காரணம் என்ன என வினவ அதற்குத் தான் கண்ட கனவே காரணம் எனக் கோவலன் பதிலுரைக்கிறார். கண்ணகிக்கு ஏற்பட்ட துயர் அறிகுறி, தன் ஆடைகள் பறிபோதல், எருமைக்கடாவின் மீது ஊர்ந்து செல்லுதல் எனத் தான் கண்ட கனவுக் காட்சிகளைக் கோவலன் விளக்குகிறார்.

**கோவலர் சிறப்பு**
பசு மாடுகளை வளர்த்து பால் வளத் தொழிலை மேற்கொள்ளும் இடையர் குலம் சார்ந்த மக்களே கோவலர் என அழைக்கப்படுகின்றனர். 'இயக்கி' என்ற தெய்வத்தைப் பாற்சோறு படைத்து வணங்கக்கூடியவர்கள் இவர்கள். இவர்களுள் மூத்த பெண்மணியாக விளங்குபவரே மாதரி அவர்கள் ஆவார். இவரிடம் தான் கண்ணகி விருந்தினராக ஒப்படைக்கப்பட்டார். ஆநிரைகளைக் காத்துப் பேணும் கோவலர் வாழ்க்கை மென்மையானத் தன்மை உடையது என இம்மக்களின் வாழ்க்கை சிறப்பிக்கப்படுகிறது.

**மதுரைக் கோட்டையின் சிறப்புகள்**
காவற்காடு, அகழி, விற்பொறிக் கடம், கருவிரற் குரங்கு உரு கவண் பொறி, கொதித்த எண்ணெய், சாணத்தைப் பொழியும் மிடாக்கள், ஆண் தலை அடுப்புப்பொறிகள், நெடுங்கொம்புகள், கழுக்கோள்கள், தலை வாங்கும் ஐயவித் துலாம், கற்களின் கூடை, வருத்தும் ஊசிகள், கிச்சிலி, பன்றிப் பொறிகள் மற்றும் எழு,சீப்பு, கணையம், எறிகோல், குந்தம், வேல், குருவித் தலைகள் ஆகியன பதிந்த கதவு என மதுரைக் கோட்டையின் சிறப்புகள் வருணிக்கப்படுகிறது.

**அடைக்கலக் காதை வாயிலாக**
**சிலப்பதிகாரம் கூறும் செய்திகள்**

- கோவலன் தான் கொல்லப்படுவோம் என அறியாத நிலையில் குற்றங்குறைகள் இல்லாத மதுரை மாநகர் குறித்தும் அதனை ஆண்ட தென்னவனின் ஆட்சிக் கொற்றம் குறித்தும் கவுந்தியடிகளிடம் பாராட்டி வியப்பது.
- 'சிலப்பதிகாரம்' காப்பியம் இயற்றிய ஆசிரியர் இளங்கோவடிகள் சமண சமயத்தவர் என்றாலும் இக்காதையின் நிகழ்வுகளில் மாடலமறையோன் உள்ளிட்ட அந்தணர் குலம் சார்ந்த காப்பிய மாந்தர் பலரும் சித்தரிக்கப்படுகின்றனர்.
- குழந்தை பிறந்து வாலாமை நாள் நீங்கிய பிறகு குழந்தைக்குப் பெயர் சூட்டும் பண்பாட்டு நிகழ்வு காணப்படுகிறது.
- சமணப் பள்ளிகளில் இல்லற வாழ்வு வாழ்வோர் தங்கக்கூடாது.
- பத்தினிப் பெண்டிர் வாழும் நாட்டில் வானம் பொய்க்காது; வேந்தன் கொற்றம் சிதையாது.
- தர்ம வாழ்வு வாழ்வோர் பிறவிப் பயன் அறுந்து பேரின்ப உலகை அடைவர்.
- மத்திம தேசம் வாரணவாசி நகரைச் சேர்ந்த உத்தரகௌத்தன் என்பார் பற்றிய செய்தி.

நேரம் மார்ச் 17, 2022

## 6 கருத்துகள்:

Prof.N.AMIRUDEEN 17 மார்ச், 2022 அன்று பிற்பகல் 8:18

மிகவும் சுருக்கமான அதே நேரத்தில் முழு தகவலுடன் எளிதில் புரியும் வண்ணம் இக்கட்டுரை அமைந்துள்ளது. பேராசிரியருக்கு வாழ்த்துக்கள்...

பதிலளி

யாவரும் கேளீர் 17 மார்ச், 2022 அன்று பிற்பகல் 10:12

மிக்க நன்றி பேராசிரியர்...
இந்த வலைப்பூவின் வளர்ச்சிக்கு தங்கள் கருத்துகள் வரவேற்கப்படுகின்றன...

பதிலளி

பிரபாகரன் 17 மார்ச், 2022 அன்று பிற்பகல் 10:50

மிகவும் பயனுள்ள Content சார். நன்றி சார்

பதிலளி

▾ பதில்கள்

யாவரும் கேளீர் 1 ஏப்ரல், 2022 அன்று பிற்பகல் 7:24

நன்றி பேராசிரியர்

பதிலளி

விஜிபாலா 24 ஜூன், 2022 அன்று முற்பகல் 7:46

சிறப்பு சார், மாணவர்களுக்கு மிகவும் பயனளிப்பதாகத் தெரிவித்தார்கள், மிக்க நன்றி சார்

பதிலளி

யாவரும் கேளீர் 24 ஜூன், 2022 அன்று பிற்பகல் 12:37

நன்றி மேடம்

பதிலளி

கருத்து வழங்க, கீழே உள்ள பட்டனைக் கிளிக் செய்து Google மூலம் உள்நுழைய வேண்டும்.

GOOGLE மூலம் உள்நுழைக

புதிய இடுகை முகப்பு பழைய இடுகைகள்

இதற்கு குழுசேர்: கருத்துரைகளை இடு (Atom)

## ஊடகவியல் வினா வங்கி

M.A., Question Bank

சிலப்பதிகாரம் (அடைக்கலக்காதை) உரைப்பகுதி (Text)
Generic Elective - II Advanced Tamil - II சிறப்புத் தமிழ் தமிழ் இலக்கியங்களும் வரலாறும்- II அலகு - 1 சிலப...

பொதுத் தமிழ் பருவம் - 1; வினா வங்கி
Part -I; Tamil-I; Semester-1;Question Bank (20U1LT1)

பொதுத் தமிழ்; பருவம்-3; வினா வங்கி
Part - I; Tamil - Semester-3; Question Bank (20U3LT3)

சாதாரணம் தீம். Blogger இயக்குவது.